**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**

**அ.வ.எண்.17/2022**

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு அக்டோபர் மாதம் 09 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சிவகாமி | மதம் | : இந்து |
| க/பெ | : நீலகண்டன் | ஜாதி | : -- |
| வயது | : 37 | கிராமம் | : திருத்தணி |
| தொழில் | : விவசாயம் | வட்டம் | : திருத்தணி |

**09.10.2025**
**வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி**

4. 30.12.2021ம் தேதியிட்டு திருத்தணி வட்டாட்சியரின் குறிப்பாணை அசல் தாக்கல் செய்கிறேன். **(குறிப்பாணை வா.சா.ஆ 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது) பொது தகவல்** அலுவலர் 18.10.2022ம் தேதியிட்டு அனுப்பிய கடிதம் அசல் மற்றும் புல வரைபடம் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். **(கடிதம் மற்றும் புல வரைபடம் வா.சா.ஆ 10 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** திருவள்ளூர் காவல் கண்காணிப்பாளருக்கு 28.02.2022ம் தேதியிட்டு நான் கொடுத்த புகார் மனு கைநகல் தாக்கல் செய்கிறேன். **(புகார் மனு வா.சா.ஆ 11 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

5. 03.12.2021ம் தேதியிட்டு திருத்தணி வட்டாட்சியருக்கு புல எண்.237/14A ஐ அளவீடு செய்ய நான் கொடுத்த மனு மற்றும் இணையவழி ரசீது தாக்கல் செய்கிறேன். **(மனு மற்றும் இணையவழி ரசீது வா.சா.ஆ 12 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** திருத்தணி காவல் உதவி ஆய்வாளர் 29.12.2021ம் தேதியிட்டு கொடுத்த மனு ரசீது அசல் தாக்கல் செய்கிறேன். **(மனு ரசீது வா.சா.ஆ 13 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 06.04.2022ம் தேதியிட்டு 1431ம் பசலிக்கு கொடுக்கப்பட்ட சாகுபடி அடங்கல் சான்றிட்ட நகல் தாக்கல்

செய்கிறேன். **(சாகுபடி அடங்கல் வா.சா.ஆ 14 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** என் பெயரில் உள்ள மின் கட்டண அட்டை அசல் தாக்கல் செய்கிறேன். **(மின் கட்டண அட்டை வா.சா.ஆ 15 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** வழக்கு சொத்திற்கான வில்லங்க சான்று இணையவழி நகல் தாக்கல் செய்கிறேன். **(வில்லங்க சான்று வா.சா.ஆ 16 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

6. வழக்கு சொத்தை நீதிமன்ற ஆணையர் பார்வையிட்டு அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்துள்ளார். **(நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடம் நீ.ம.சா.ஆ 1 ஆகவும் நில அளவையர் அறிக்கை நீ.ம.சா.ஆ 2 ஆகவும் நில அளவையர் வரைபடம் நீ.ம.சா.ஆ 3 ஆகவும் புகைப்படங்கள் (20 எண்ணம்) நீ.ம.சா.ஆ 4 வரிசை (20 எண்ணம்) ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது)** பிராதுப்படி தீர்ப்பு செய்ய வேண்டுமாய் பிரார்த்திக்கிறேன்.

(குறுக்கு விசாரணை வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)